இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்
# YESUVAI THINAM PARKIREN

Vol : 26
Issue : 05

MAY 2026

ஆண்டு சந்தா : 100/-
தனிப்பிரதி : 10/-



## கர்த்தரோடிராவிட்டால்
## சிதறடிக்கப்படுவீர்கள்.

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது DIGITAL முறையில் நம்முடைய இணையதளத்திலும்

**WWW.JESUSLIVES.IN**


வானத்தின் வாசலில்
ஆசீர்வாத உபவாச ஜெபம்
மே 8,9 வெள்ளி, சனி
9.30 A.M. to 2.30 P.M.
வானத்தின் வாசல் சுவிசேஷ மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்.
EVG. L. வின்சென்ட்ராஜ்
தொடர்புக்கு:
94428 00449, 94980 00449
EVG. கலா வின்சென்ட்ராஜ்


மதுரையில்
எழுப்புதல் உபவாச ஜெபம்
2026 மே
16
காலை 9.30 மணி முதல் மதியம் 2.30 மணி வரை
3வது சனிக்கிழமை
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC டிப்போ அருகில், மதுரை மாவட்டம்.
EVG. L. வின்சென்ட்ராஜ்
EVG. கலா வின்சென்ட்ராஜ்
தொடர்புக்கு:
94428 00449
94980 00449

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **ஏசாயா 40:28-ல் அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை இளைப்படைவதுமில்லை** என்ற வார்த்தையின்படி தேவன் நம்முடைய காரியத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, நம் ஆபத்து காலத்தில் நன்மையானவைகளை காணச் செய்கிறார். தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த மார்ச் 19 முதல் ஏப்ரல் 6 வரை ஆஸ்திரேலியாவில் சிட்னி, குயின்ஸ்லாந்து பகுதிகளில் கர்த்தருடைய நாமத்தை உயர்த்த, மகிமைப்படுத்த தேவன் அநுக்கிரகம் செய்தார். சென்ற இடங்களிலெல்லாம் ஆவியானவர் பலமாய் அசைவாடினார். ஜனங்கள் உயிர்ப்பிக்கப்பட்டார்கள். தேவனுக்குள் பலப்படுத்தப்பட்டார்கள். தாகமுள்ளவர்கள் மேல் தேவன் பரிசுத்த ஆவியானவரை மழைபோல் ஊற்றினார். அதைத்தொடர்ந்து செம்பட்டி வானத்தின் வாசல் உபவாச ஜெபத்தையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். இந்த பத்திரிக்கை உங்கள் கையில் இருக்கும்போது நாங்கள் சுவிசேஷ எழுப்புதல் ஜெபமுகாமில் ஈடுபட்டிருப்போம். அதைப் பற்றி வரும் மாதங்களில் உங்களுக்கு தெரியப்படுத்துவோம். அதேபோல் மே முதல் வாரத்தில் தமிழ்நாடு உட்பட ஐந்து மாநில தேர்தல் முடிவுகளும் வெளியாகி இருக்கும். தொடர்ந்து இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களும், சட்டங்களும் கடுமையாக்கப்பட்டு தேவனுக்கு விரோதமாக செயல்படுவதை பார்க்கிறோம் இதற்காகவும், நம்முடைய சுவிசேஷபணி ஊழியங்களுக்காகவும் மற்ற எல்லா ஊழியங்களுக்காகவும் கருத்தாய் ஜெபிக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யமும், கர்த்தருடைய மகிமையும் இந்த பூமியில் உண்டாக ஜெபிக்க வேண்டும். உங்கள் மேலான ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்க, முன்வர உங்களை அன்போடு அழைக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நாம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.



இயேசுவின் பணியில்



(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

சகோ. L. வின்சென்ட்ராஜ்

# கர்த்தரோடிராவிட்டால் சிதறடிக்கப் படுவீர்கள்



ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

**"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான். என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" மத் 12:30** என்று ஆண்டவராகிய இயேசு சொல்லுகிறார். நீங்கள் தேவனோடு இல்லாவிட்டால் துரோகியாக, சத்துருவாக மாறி விடுவீர்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் கூட நாம் எல்லாரும் தேவனோடு இருக்க வேண்டும். அப்படி இராவிட்டால் சாத்தான் நம்மை சிதறடித்து விடுவான். இக்கட்டான சூழ்நிலையில் இயேசு கெத்சமனே தோட்டத்திற்கு சீஷர்கள் மூன்று பேரைகூட்டிக்கொண்டு ஜெபம் பண்ண போனார். நீங்கள் எப்பொழுது ஜெபம் பண்ண வேண்டும் என்றால் இக்கட்டு வரும் போது, வேதனை வரும் போது, துன்பம் வரும் போது ஜெபிக்க வேண்டும். நாம் தேவனோடு இருக்க வேண்டும். அதனால் தான் இயேசு சீஷர்களை கெத்சமனேதோட்டத்திற்கு கூட்டிக்கொண்டு போய் **(மத்தேயு 26:40.41) நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக்கூடாதா? ஜெபம் பண்ண கூடாதா? என்று இயேசு கேட்கிறார்.** எப்பொழுது ஒருவர் தேவனோடு இருக்க முடியும் என்றால் அவரை நோக்கி ஜெபம் பண்ணும்போதும், அவரோடு பேசும்போதும் தான். மொபைல் போன் பார்க்கும் போது இயேசுவோடு இருக்க முடியாது. சாப்பிட்டுக்கிட்டே, பார்த்துகிட்டே, தூங்கிக்கிட்டே இயேசுவோடு இருக்க முடியாது. அவரை ஒரு எஜமானராக, மீட்பராக, இரட்சகராக நினைத்து அவருக்கு ஒரு சிங்காசனம் வைத்து அவருக்கு முன்பாக நீங்கள் இருக்க வேண்டும்.

தாவீது கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். இயேசு மலை மீது ஏறி தம்மோடு



இருப்பதற்காக சீஷர்களை அழைத்தார். பிசாசுகளை துரத்துவதற்காக 12 பேரை தேர்ந்தெடுத்தார். நீங்கள் அவரோடு இருக்க வேண்டும் என்று உங்களை ஆண்டவர் தெரிந்தெடுத்திருக்கிறார். ஜெபம் பண்ண முடியமால், சூழ்நிலைகள் உங்களுக்கு விரோதமாக இருக்கும் போதும், இன்னும் அதிகமாக போராட்டம், பிரச்சனை இருக்கும் போதும், நீங்கள் கர்த்தரோடு இருக்க பழகவேண்டும். சோர்ந்து போக கூடாது, நம்பிக்கை இழந்து விடக்கூடாது. நீங்கள் ஆண்டவரோடு இருந்தால் அவர் உங்களோடு இருப்பார். **நீங்கள் கர்த்தரோடிருந்தால். அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டு விடுவார். 2நாளாகமம் 15:2.** நீங்கள் அவரோடிருந்தால் அவர் உங்களோடு இருப்பார். நீங்கள் அவரோடு இல்லாவிட்டால் அவர் உங்களை விட்டு விடுவார். ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு விரோதமாய் பாவம் செய்தால் கர்த்தர் அவர்களை மன்னித்து விடுவார். ஒரு மனிதன் கர்த்தருக்கு விரோதமாக, பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பாவம் செய்தால் யார் மன்னிக்க முடியும். அதனால்தான் நாம் கர்த்தரோடுகூட இருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

## யோபு கர்த்தரோடிருந்தார்

யோபுவின் வாழ்க்கையைப் பார்க்கும்போது இக்கட்டான கொடிய வியாதியில், வலி வேதனையில் அவன் தேவனோடு இருந்தான். அவன் நண்பர்கள் அவனைப் பார்த்து இவ்வளவு நடந்தும் இன்னுமா தேவனை தேடுகிறாய் என்றார்கள். அவன் மனைவி இன்னுமா உம்முடைய உத்தமத்தில் இருக்க போகிறாய் என்று சொல்கிறாள். அதற்கு யோபு இன்னும் தேவனை நம்புவேன். இனிமேலும் நம்புவேன்



என்று சொல்லுகிறார்.

**எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய் பேசினது முதல் அவனை நினைத்துக் கொண்டே இருக்கிறேன். ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது. அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா 31:20** அதே போல யோபுவுக்கு இரங்கினார். மனைவி கேவலமாக பேசினாள். நண்பர்கள் திட்டி தீர்த்தார்கள். ஆறுதல் சொல்ல வந்தவர்கள் காயப்படுத்தினார்கள். ஆனால் யோபு எந்த நிலையிலும் முன் வைத்த காலை பின் வைக்காமல் நான் கர்த்தரோடு இருப்பேன் என்பதில் உறுதியாய் நின்றார். நீங்கள் தண்ணீர்களை கடக்கும் போதும், அக்கினியில் நடக்கும் போதும் வேகாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளுகிற தேவன் உங்களோடு இருப்பார்.

தானியேலை சிங்கக்குகையில் போட்டுவிட்டு ராஜா கேட்கிறார், நீ இடைவிடாமல் ஆராதிக்கின்ற தேவன் உன்னை தப்புவிக்க வல்லவராக இருந்தாரா? என்று அதற்கு தானியேல் இருந்தார். இனிமேலும் இருக்க போகிறார். நீங்கள் என்னை ஏழுமடங்கு அக்கினி சூளையில் போட்டாலும்,

நான் உங்களுக்கு சொல்ல போகிற பதில். தேவன் என்னோடு இருக்கிறார் என்பதே. என்னுடைய துன்பத்தில். உபத்திரவ நேரத்தில் நான் அவரோடு இருக்கிறேனா என்று தேவன் என்னைப் பார்க்கிறார்என்று தானியேல் சொல்லுகிறார். வேதத்தில் லூக்கா 22:28-ல் மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே என்று சொல்லப் பட்டுள்ளது. எனக்கு வந்த நாசமோசங்கள். அவமானங்கள், சிலுவைகள், மனிதனுடைய சூழ்ச்சிகள், போராட்டங்களில் என்னோடு கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே என்று சீஷர்களை பார்த்து இயேசு சொல்லுகிறார். ஆகவே தான் தேவன் சொன்னார் என்னோடு இராதவன் சிதறடிக்கப்படுவான் என்று. யோபு தனக்கு நேரிட்ட எல்லா உபத்திரவத்திலும் கர்த்தரோடு இருந்தான்.

புதிய ஏற்பாட்டு காலத்தில் தேவன் நம்மை தேற்றுகிறவராக இருக்கிறார். ஆனால் பழைய ஏற்பாட்டு காலத்தில் அப்படி அல்ல, தேவன் நினைத்தால் தான் கிருபை கிடைக்கும். நம்முடைய முற்பிதாக்கள் தங்கள் வாழ்க்கையில் உபத்திரவம் வந்தாலும் கர்த்தரையே நம்பினார்கள். நாம் அப்படி அல்ல. சிறு பிரச்சனையைக் கூட நம்மால் தாங்க முடியவில்லை. ஆனால் யோபு என்ன வந்தாலும் நம்புவேன். என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்று விசுவாசித்தான். அவனுக்கு 140 வருடம் ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுத்து பல நன்மைகளை காணச்செய்தார். அந்த தேவன் இன்றும் உயிரோடு இருக்கிறார். நீங்கள் அவரோடு இருக்கிறீர்களா? பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்வது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்று ஆண்டவர் சொல்லுகிறார். நீங்கள் கர்த்தரை எந்த இடத்தில் உயர்த்தினாலும் அங்கு உங்களோடு இருப்பார். உங்கள் வீடு பரலோகமாக மாறும். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். உங்களுடைய கண்ணீரின் நாட்களை முடியப் பண்ணுவார். யோபு எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரோடு இருந்தான். நீங்கள் அவரோடு இருக்கிறீர்களா?

## தேவனை விட்டு விலகாதிருங்கள்

சாத்தானின் வேலை உங்களை தேவனிடம் இருந்து பிரிப்பது தான். ஆதாமும் ஏவாளும் பகலின் குளிர்ச்சியான வேளையில் ஏதேன் தோட்டத்தில் உலாவுகிற தேவனின் சத்தத்தை கேட்பார்கள். நாள்தோறும் தேவனை பார்ப்பார்கள். நன்மையை மட்டும் பார்க்கட்டும் என்று தேவன் அவர்களை வைத்திருந்தார். ஆனால் அவர்கள் கர்த்தருடைய சத்தத்தை அசட்டை பண்ணி, சாத்தானின் சத்தத்தை கேட்டார்கள். அதனால் அவர்களுடைய சரீர பிரகாரமான கண் திறக்கப்பட்டு தேவ சாயலை இழந்து விட்டார்கள். ஏதேன் தோட்டத்தை விட்டு



ஆண்டவர் அவர்களை விரட்டி விட்டார். சிதறடிக்கப்பட்டு போய் விட்டார்கள். இன்றைய காலக்கட்டத்தில் நாம் ஆராதனை செய்யலாம். பாட்டு பாடலாம், ஆனால் மிகவும் முக்கியமானது ஜெபம் பண்ணுவதும். அந்த ஜெபத்தில் நிலைத்திருப்பதும் தான்.

ஆண்டவரிடம் இருந்து நம்மை பிரிப்பது, மனைவியிடம் இருந்து கணவனை பிரிப்பது, கணவனிடம் இருந்து மனைவியை பிரிப்பது, பிள்ளைகளை பெற்றோரிடம் இருந்து பிரிப்பது எப்படி என்று சாத்தான் பல கன்னிகளை வைத்திருக்கிறான். சாத்தானுக்கு ஆண்டவர் பல

பெயர்களை வைத்திருக்கிறார். சோதனைக் காரன், பொய்யன், திருடன், அசுத்த ஆவி. அசுத்தங்களை கொண்டு வருகிறவன் என்று. ஆனால் வசனம் சொல்லுகிறது **நாகூம் 2:1-ல் சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான். அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல் பண்ணு. அரையைக் கெட்டியாய்க் கட்டிக் கொள். உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து என்று.** அவனுக்கு இன்னொரு பெயர் சிந்தனையை திசை திருப்புகிறவன். தேவன் நம்மை மன்னித்து திரும்பவும் அவருடைய கிருபைக்குள் கொண்டு வருகிறார். சிதறடிக்கிறவன் முன்பாக நம்மை காத்துக் கொள்ள நாம் கர்த்தரோடு இருக்க வேண்டும். ஆதாம் ஏவாளைப் போல நீங்கள் தேவனுடைய தோட்டத்திலிருந்து துரத்தப்படக்கூடாது. கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்.

இந்த ஜனத்தை எனக்காகவே ஏற்படுத்தினேன். இவர்கள் என்னுடையவர்கள். இவர்கள் என் பிள்ளைகள் என்று தேவன் சொல்லுகிறார். ஆகவே சிதறடிக்கிறவனுக்கு நாம் நேரத்தை கொடுக்கக்கூடாது. என்னைச் சிதறடிப்பதற்குப் பெருங்காற்றைப் போல் வந்தார்கள். சிறுமையானவனை மறைவிடத்திலே பட்சிப்பது அவர்களுக்குச் சந்தோஷமாயிருந்தது. நீர் அவனுடைய ஈட்டிகளினாலேயே அவனுடைய கிராமத்து அதிபதிகளை உருவக்குத்தினீர். **ஆபகூக் 3:14. என்னை சிதறடிக்க காற்றை போல் என் மேல்வந்தார்கள். அப்படியே அவர்களை நீர் திருப்பி விட்டீர்** என்று சொல்லபட்டிருக்கிறது. உங்களுக்கு விரோதமாய் வந்த சாத்தானின் ஆயுதங்கள் அவனுக்கே திரும்ப போகிறது. சிதறடிக்கிறவர்களுக்கு முன்பாக நீங்கள் தொய்ந்து போக மாட்டீர்கள். நீங்கள் அவரோடு இருந்தால் அவர் உங்களுக்காக நிற்பார். உங்களுக்கு அற்புதம் செய்வார்.

**அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத்**



**தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர் களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி, அறுப்பு மிகுதி. வேலையாட்களோ கொஞ்சம் என்றார். மத்தேயு 9:36,37.** தொய்ந்து போனவர்கள் என்றால் உற்சாகம் இழந்து, நம்பிக்கை இழந்து போனவர்கள் என்று அர்த்தம். இனி நம்புவதற்கு எதுவும் இல்லை என்ற நிலையில் இருப்பவர்கள். நீங்கள் அவரோடு இருந்தால் உங்களுக்கு அநேக அற்புதங்கள் நடக்கும். நீங்கள் ஆண்டவரோடு இருப்பதற்கு ஒரே வழி அவருடைய சத்தத்தை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். மரித்தோர் தேவனுடைய சத்தத்தை கேட்கும் காலம் வருகிறது என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார். இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். **லூக்கா 1:51 ஆண்டவர் பேதுரு என்ற சீஷனிடம் உங்களில் ஒருவன் என்னை காட்டிக் கொடுப்பான். எல்லாரும் மறுதலித்து ஓடிப்போவீர்கள் என்றார்.** அதற்கு பேதுரு எல்லாரும் உம்மை விட்டு ஓடினாலும் நான் உமக்காக என் உயிரையே கொடுப்பேன்

என்றான். பேதுருவின் சிந்தையில் பட்டயத்தை பற்றிய ஒரு அகந்தை இருப்பதை சாத்தான் புரிந்து கொண்டான், மற்ற சீஷர்கள் இயேசுவை மறுதலிக்கவில்லை பேதுருவை மட்டும் மறுதலிக்க வைத்தான். நம்முடைய இருதயத்தில், சிந்தையில் அகந்தை உள்ளவர்களாக நாம் இருந்தால் சிதறடிக்கப்பட்டு போய் விடுவோம். அப்பொழுது, **இயேசு அவர்களை நோக்கி, மேய்ப்பனை வெட்டுவேன். மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்றும் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள். மத்தேயு 26:31** மேய்ப்பனை வெட்டும் போது ஆடுகள் ஓடிப்போய் விட்டன. சிதறடிக்கப்பட்டன. இப்படிப்பட்ட உலகத்தில் வாழ்கின்ற நீங்கள் சிதறடிக்கப்படாதபடி ஆண்டவர் உங்களை பாதுகாக்கிறார். கர்த்தர் உங்களை சிதறடிக்காதபடிக்கு அவர் எல்லைக்குள்ளே. அவர் பாதுகாப்புக்குள்ளே வைத்திருக்கிறார். உங்கள் பிள்ளைகள் தவறான வழியில் போகாதபடி ஆண்டவர் காத்துக் கொள்வார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நீங்கள் அவரோடு இருந்தால் சாத்தான் உங்களை சிதறடிக்க முடியாது.

## ஜெபத்தில் கர்த்தரோடிருங்கள்

**அப்பொழுது சணல் வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின் மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் என்றும், பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவுபெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்றும் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடக் கேட்டேன் என்று தானியேல் 12:7-ல்** சொல்லப்பட்டபடி பரிசுத்த ஜனங்களின் வல்லமையை சிதறடித்தான்.

தேவபிள்ளைகள் பரிசுத்த ஆவினால் நிரம்பாமல், அந்நிய பாஷை பேசாமல் இருந்தால், சாத்தானை முடக்க முடியாது. அவன் திட்டமிட்டு தேவ பிள்ளைகளை குறி வைக்கிறான் பரிசுத்த வல்லமையை சிதறடிக்கிற அந்த அரைக்காலமும், முழுக்காலமும் முடிவடையப் போகிறது. தானியேல் மூன்று வேளையும் ஜெபம் பண்ணினார். கர்த்தர் அவரோடுஇருந்தார். பாபிலோனுக்கு சிறைப்பட்டு போன போது தானியேல் சொல்லுகிறார் 70 வருடத்திற்கு பிறகு நாம் சீயோனில் வாசம் பண்ணுவோம். எருசலேமை மறுபடியும் கட்ட போகிறோம் என்று தன்னோடு சிறைப்பட்டு வந்தவர்களுக்கு சொல்லுகிறார்.

தானியேல் அந்த தேசத்தில் ஜெபம் பண்ணி கர்த்தரை தேடினதினால் சிறையிருப்பு மாறினது. இன்றைக்கு உங்கள் சிறையிருப்பும் நீங்கள் ஜெபம்பண்ணி கர்த்தரோடிருந்தால் மாற்றப்படும். கர்த்தர் சிதறடிக்கிறவனை இல்லாமல் போகப் பண்ணுவார். இந்த கடைசி காலத்தில் ஆவியானவர் சொல்லுகிறார் நீங்கள் அவரோடு இருக்க வேண்டும். வேதத்தில் நிலைத்திருக்க வேண்டும். ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்க வேண்டும் என்று. அப்பொழுது சிதறடிக்கிறவன் உங்களை விட்டு ஓடிப்போய் விடுவான். நீங்கள் ஜெயமாய் வாழ்வீர்கள். இப்படிப்பட்ட வாழ்க்கையை நீங்கள் மறந்துவிட்டு எனக்கு ஒரே பாடு. துயரம், போராட்டம், பிரச்சனை என்று சொல்லாமல். நீங்கள் கர்த்தரோடு எப்பொழுதும் ஜெபித்துக் கொண்டே இருக்க அவர் விரும்புகிறார். அப்பொழுது அவர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார், சிதறடிக்கிறவனை உங்களை விட்டு துரத்துவார். என் தேவனாகிய கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.



பெண்கள் பகுதி

# கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணை செய்கிறார்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

நம் வாழ்வில் நாம் பிறக்கும் போது பெற்றோரின் துணையோடு பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, திருமணம் முடித்து, கணவர், பிள்ளைகள், உறவுகள் துணையோடு வாழ்ந்து, சமுதாயத்தில் உள்ளவர்கள் உறுதுணைகளோடு பல்வேறு விதங்களில் நம் வாழ்க்கை பயணத்தில் சென்று கொண்டிருக்கிறோம். **ஏசா 50:7-ல் கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணை செய்கிறார். ஆகையால் நான் வெட்கப்படேன். நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன். ஆதலால் என் முகத்தை கற்பாறையை போலாக்கினேன். 9-ஆம் வசனத்திலும் இதோ கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணை செய்கிறார். என்னை ஆக்கினைக்குள்ளாக்குகிறவர் யார்?** என்று ஏசாயா சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம். தாவீதும் தன் சங்கீதத்தில் **சங். 46:1 தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர் என்கிறார். சங்கீதம் 40:17 நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என் மேல் நினைவாயிருக்கிறார். தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர். என் தேவனே தாமதியாதேயும் என்கிறார். சங் 115:9-11ல் இஸ்ரவேலே கர்த்தரை நம்பு! அவரே அவர்களுக்கு துணையும், அவர்களுக்கு கேடகமுமானவர். ஆரோன் குடும்பத்தாரே கர்த்தரை நம்புங்கள். அவரே அவர்களுக்கு துணையும் அவர்களுக்கு கேடகமுமாயிருக்கிறார். கர்த்தருக்கு பயப்படுகிறவர்களே! கர்த்தரை நம்புங்கள். அவரே அவர்களுக்கு துணையும் அவர்களுக்கு கேடகமுமாயிருக்கிறார்** என்று சங்கீதக்காரன் சொல்கிறான். **சங் 33:20 நம்முடைய ஆத்துமா கர்த்தருக்காக காத்திருக்கிறது. அவரே நமக்கு துணையும் நமக்கு கேடகமுமானவர்** என்று தங்களுக்கு துணை செய்கிற கர்த்தருக்கு காத்திருக்கிறதையும், அவரை நம்புகிறதையும் தங்கள் அனுபவத்தை சங்கீதக்காரன் எழுதுகிறதை நாம் வாசிக்கிறோம்.

ஆண்டவரும் என்ன சொல்கிறார் என்றால் **ஏசாயா 41:13-ல் உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து பயப்படாதே! நான் உனக்கு துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன் என்றார்.** நாம் தனிமையானவர்கள் அல்ல, அனாதைகளல்ல, நமக்கு ஒரு ஆண்டவர் இருக்கிறார். அவர் நாமம் இயேசு கிறிஸ்து! அவர் நமக்கு துணை செய்கிறார். நாம் எந்த காரியத்திலும் வெட்கப்படுவதில்லை. எஸ்றாவின் புத்தகத்தில்

இடிக்கப்பட்டு, தகர்க்கப்பட்டிருக்கிற ஆலயத்தை கட்ட கோரேஸ் ராஜாவின் இருதயத்தை ஏவி எருசலேமிலே கர்த்தருக்கு ஆலயம் கட்ட போக யார் மனதாயிருக்கிறார்களோ அவர்கள் போகட்டும் என்று சொல்லி அறிவிப்பு கொடுத்து, உற்சாகமாய் பொன், வெள்ளி, மற்ற திரவியங்களையெல்லாம் கொடுத்து உதவ ஜனங்களுக்கு அறிவித்தான். எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள். எஸ்றாவோடு தேவகரம் இருந்ததினால் ராஜாவும், வேண்டியதெல்லாம் கொடுத்தான். **எஸ்றா 8:22-ல் வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணைசெய்யும்படிக்கு, நான் ராஜாவினிடத்தில் சேவகரையும் குதிரைவீரரையும் கேட்க வெட்கப்பட்டிருந்தேன்; எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார்மேலும் இருக்கிறதென்றும், நாங்கள் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம்** என்று எஸ்றா சொல்கிறதை நாம் வாசிக்கிறோம். எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு துணை செய்கிறபடியால் ராஜாவிடம் சேவகர்களையோ, குதிரை வீரரையோ கேட்க வெட்கப்பட்டு கர்த்தரே துணை என்று நின்ற எஸ்றா வெட்கப்பட்டு போகவில்லை. நம் வாழ்விலும் மனுஷரை சார்ந்து கொள்ளாமல் கர்த்தரையே சார்ந்திருப்போமானால் அவர் நமக்கு துணை செய்து, நாம் வெட்கப்பட்டு போகாதபடி நமக்கு துணையாய் இருந்து நாம் வேண்டிக் கொள்கிற, நினைக்கிற நன்மைகளை நமக்கு செய்வார்.

## கர்த்தர் யாருக்கு துணை?

யோசபாத் ராஜா சில தலைவர்களை அழைத்து நியாயம் விசாரிக்க எருசலேமிலே நியமித்து, நீங்கள் கர்த்தருக்கு பயந்து உண்மையோடும், உத்தம இருதயத்தோடும் நியாயம் விசாரிக்கிற காரியத்தில் செயல்படுங்கள் என்று சொல்லிவிட்டு **2 நாளாகமம் 19:11-ல் நீங்கள் திடமானதாயிருந்து காரியங்களை நடத்துங்கள். உத்தமனுக்கு கர்த்தர் துணை என்றான்** என்று வாசிக்கிறோம். **சங்101:2-ல் தாவீது உத்தமமான வழியில் விவேகமாய் நடப்பேன். எப்பொழுது என்னிடத்தில் வருவீர் என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன்** என்றான். எங்கும் எதிலும் உத்தமமாய் இருக்க வேண்டும். யோபு வாழ்க்கையில் இந்த உத்தமம் இருந்தது. எது இருந்தாலும், இழந்தாலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்ற போது அவன் மனைவி **நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் இருக்கிறீரோ, தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். யோபு 2:9.** என்ன நடந்தாலும் ஆண்டவரை விட்டு பிரியாத விசுவாசம் நம் வாழ்வில் இருந்தால் அது உத்தமம்.

ரூத்தின் வாழ்க்கையை பாருங்கள் ஆண்டவரை அறியாத புறஜாதிப்பெண். மாமி நகோமியை பற்றி கொண்டு மோவாபிய தேசத்தை விட்டு எருசலேமுக்கு வந்து விட்டாள். மாமியின் ஆலோசனை கேட்டு போவாஸின் பாதத்தண்டையில் போய் படுத்துக்கொண்ட போது **ரூத் 3:10-ல் போவாஸ் உன் முந்தின நற்குணத்தை காட்டிலும் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது என்றான்.** முந்தின நற்குணம் என்ன? இந்த தேவன் என்னுடைய தேவனாய் இருப்பார் என்று ஏற்றுக்கொண்டு வந்தது. பிந்தின நற்குணம், நீர் என் மணவாளன்! நீதான் என் தஞ்சம்! உம்மைத் தவிர எனக்கு யாருமில்லை. வேறு எங்கும் நான் செல்ல மாட்டேன் என்பதாக ஆண்டவரையேபற்றிக் கொள்வது போல நம் வாழ்க்கையும் இருந்தால், இந்த ரூத்தின் வாழ்க்கை இடிக்கப்பட்டதை மீண்டும் தேவன் கட்டினார், அவளுக்கு பெரிய நன்மை,



வாழ்வு கிடைத்தது. என் வாழ்வில் என்ன நடந்தாலும், எது இல்லாவிட்டாலும் நீர் தான் எனக்கு துணை என்று அவரை பற்றிக்கொண்ட உங்களுக்கும் பெரிய நன்மை, புதுவாழ்வு கிடைக்கும்

மோசேயோடு கர்த்தரை உத்தமமாய் பின்பற்றி வந்த காலேப்போடுகூட கானான் தேசத்தை சுற்றிப் பார்க்க மோசே ஒவ்வொரு கோத்திரத்திலும், ஒவ்வொருவராக அனுப்பி வைத்தபோது பத்து கோத்திரத்தை சேர்ந்த 10 பேர் நாங்கள் தேசத்தை சுற்றிப் பார்த்து வந்தோம். அங்கே ஏனாக்கியரை கண்டோம். அவர்கள் நம்மை விட பலமுள்ளவர்கள்! நெடியர்கள்! உயரமானவர்கள். நாங்கள் எங்கள் பார்வைக்கும், அவர்கள் பார்வைக்கும் வெட்டுக்கிளிகளை போல் இருந்தோம் என்றார்கள். ஆனால் காலேப் கர்த்தர் நம்மில் பிரியமாயிருந்தால் அந்த தேசத்தில் நம்மை கொண்டு போய் சேர்ப்பார் என்று சொல்லி விசுவாசத்தை வெளிப்படுத்தி கர்த்தரிடத்தில் உத்தமமாய் இருந்தான்.

அதனால் யோசுவா 14:8-லிருந்து 14 வரை வாசித்தால் அவன் இருதயத்தில் உள்ளபடி மறுசெய்தி கொண்டு வந்ததை, உத்தமமாய் பின்பற்றினதை அறிந்த மோசே உன் கால் மிதித்த தேசம் உனக்கும், உன் பிள்ளைகளுக்கும் சுதந்தரமாயிருக்கட்டும் என்று ஆணையிட்டதை யோசுவாவிடம் சொல்லி இப்போதும் அதே பெலன் எனக்கு இருக்கிறது என்ற போது யோசுவா எப்புன்னேயின் குமாரனாகிய காலேபை ஆசீர்வதித்து எபிரோனை அவனுக்கு சுதந்திரமாகக் கொடுத்தான். **சங் 84:11 தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர். கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்** என்று சங்கீதக்காரன் சொல்லுவது போல உத்தமமாய் நடந்த தாவீதின் வாழ்வில் நன்மை, ரூத்தின் வாழ்வில் நன்மை, காலேப் வாழ்வில், நன்மை தந்த தேவன் உத்தமனுக்கு துணையாக, நன்மையாக ஆசீர்வாதங்களை தந்து நடத்திய தேவன், இப்படிப்பட்ட ஏதோ ஒரு நன்மைக்காக, ஆசீர்வாதத்திற்காக ஏங்குகிற, எதிர்பார்க்கிற நமக்கும் தந்து ஆசீர்வதிப்பார்.

## கர்த்தாவே! துணை நில்லும்

அமைதியாய் வாழ்ந்து கொண்டிருக்கும்போது அவர்களுக்கு விரோதமாக எத்தியோப்பியனாகிய சேரா 10 லட்சம் பேர் கொண்ட பெரிய சேனையோடு எதிர்த்து வந்தான். இவனிடம் (ஆசா) அதில் பாதிப்பேர் தான் இருக்கிறார்கள். எதிர்த்து நிற்க முடியாது 2 நாளா 14:11 வசனத்தில் **ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம். எங்கள் தேவனாகிய கர்த்தாவே! எங்களுக்கு துணை நில்லும். உம்மை சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம் கர்த்தாவே! நீர் எங்கள் தேவன் மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும்** என்று ஜெபம் பண்ணுகிறான். ஆசா தன் இக்கட்டில் கர்த்தாவே! துணை நில்லும்! என்று கூப்பிட்டபோது இந்த 10 லட்சம் பேருக்கு இருக்கிற வல்லமை, பெலத்தை விட மிக மிக பெரியவர் எழுந்தார். 12,13 வசனங்களில் அப்பொழுது கர்த்தர் எத்தியோப்பியரை ஆசாவுக்கும், யூதாவுக்கும் முன்பாக முறியடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள். அவர்களை ஆசாவும் அவனோடிருந்த ஜனங்களும் துரத்தினார்கள். அவ்வளவுதான்! ஆனால் கர்த்தருக்கும் அவருடைய சேனைக்கும் முன்பாக முறிந்து விழுந்து திரும்ப பலம் கொள்ளாதபடிக்கு நொறுங்கிப் போனார்கள். அதே தேவன் உங்களுக்கும் துணை நிற்பார். கர்த்தாவே! எங்களுக்கு துணை நில்லும் என்று, எத்தனை பெரிய பிரச்சனைகளை நாம் சந்தித்தாலும் அதைவிட பெரியவர் நமக்கு துணை நின்று பெரிய பெரிய பிரச்சனைகளை, நாம் சந்திக்கும் அவமானங்களை, கடன் பிரச்சனைகளை, குடும்ப பிரச்சனை, வியாதி கவலைகள் கண்ணீர் எல்லாம் கர்த்தருக்கு முன்பாக நொறுங்கிப் போகச் செய்வார். நாம் மாத்திரம் கர்த்தாவே எனக்கு இந்த காரியத்தில் துணைநில்லும் என்று சொல்வோமானால் ஆசாவுக்கும், யூதாவுக்கும் துணை நின்ற கர்த்தர் நமக்கும் துணை நிற்பார்.


**1 இராஜாக்கள் 15:14 ஆசா உயிரோடு இருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாய் இருந்தது.**

உசியா ராஜாவாகிற போது 16 வயதாயிருந்தான். கர்த்தரின் பார்வையில் செம்மையானதை செய்தான். தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான். அவன் கர்த்தரை தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார். **2 நாளா 26:7-ல் அவன் எதிரிகளை வெல்ல தேவன் அவனுக்கு துணை நின்றார்.** இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் இருந்து கானானுக்கு புறப்பட்டபோது எதிரே செங்கடல் வந்தது. பின்னே பார்வோன் சேனை துரத்தி வந்தது. கர்த்தர் மோசேயை கொண்டு செங்கடலை பிளந்து அவர்களை உள்ளே பிரவேசிக்கப் பண்ணினார். பார்வோன் சேனையும் செங்கடல் உள்ளே பிரவேசித்தது. யாத்.14:24,25 வசனத்தில் **கிழக்கு வெளுத்து வரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையை கலங்கடித்து அவர்கள் இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார். எகிப்தியர் அப்பொழுது இஸ்ரவேலரை விட்டு ஓடிப் போவோம். கர்த்தர் அவர்களுக்கு துணை நின்று எகிப்தியர்க்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார் என்றார்கள்.** இந்த அற்புதம் நம் வாழ்விலும் நடக்கும். எதிராளிகள் ஓடிப்போவார்கள். விசுவாசியுங்கள் திரும்ப பெலம் பெற முடியாமல் நொறுங்குவார்கள்.

எசேக்கியாவின் நாட்களில் சனகெரிப் கூடிக்கொண்டு யுத்தம் செய்ய வருகிறதை கண்டபோது அவனும் தலைவர்களை கூடி வரச்செய்து 2 நாளா 32:7,8-ல் **நீங்கள் திடன் கொண்டு தைரியமாயிருங்கள். அசீரியா ராஜாவுக்கும், அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள். அவனோடு இருப்பது மாம்சபுயம். நமக்கு துணை நின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம் தேவனாகிய கர்த்தர் தானே** என்று அவர்களை தேற்றினான். ஜனங்கள் எல்லாம் இந்த வார்த்தையின் மேல் நம்பிக்கை வைத்தார்கள். எதிரிகள் அழிந்தார்கள்.

## அவர் உனக்கு துணையாயிருப்பார்

பவுலுக்கும் ஆண்டவர் துணை நின்றார். **2 தீமோத் 4:16,17-ல் பவுல் நான் முதல் விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடு கூட இருக்கவில்லை. எல்லாரும் என்னை**



**கைவிட்டார்கள். அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக! எனக்கு துணையாக நின்று என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும் புறஜாதியெல்லாரும் கேட்கிறதற்காகவும் என்னை பலப்படுத்தினார். சிங்கத்தின் வாயினின்று இரட்சிக்கப்பட்டேன் என்கிறார்.** நம் வாழ்விலும் எல்லாராலும் கைவிடப்படுகிற நேரங்களில் கடந்து போகிறோம். நம்மிடம் உதவி பெற்றவர்கள் நம்மை தூக்கி எறிகிற போது உள்ளம் உடைகிறோம். அவமானப்படுத்தி, கேவலப்படுத்தி, சிங்கங்களின் வாயில், பற்களில் சிக்கித் தவிப்பது போல தனிமையின் பாதையில் போகிற போது கர்த்தரே நமக்கு துணையாக நின்று சிங்கத்தின் வாயினின்று நம்மை இரட்சித்து, நான் உனக்கு துணை நிற்கிறேன், எல்லாரும் உன்னை கைவிட்டாலென்ன நான் உன்னை காப்பாற்றுவேன் என்று பவுலைக் காப்பாற்றினவர் நம்மையும் காப்பாற்றுவார்.

யோசேப்பு வாழ்வில் கூட எத்தனை எதிராளிகள் சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு எகிப்தியருக்கு

விற்கப்பட்டான். பொய் குற்றம் சாட்டப்பட்டு அவமானத்தோடு சிறைச்சாலையில் கிடந்தான். கர்த்தர் அவனுக்கு துணையாயிருந்து அவனை மேன்மையாய் உயர்த்தினார். யாக்கோபு தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிற போது யோசேப்பைப்



பற்றி **ஆதி 49:23-25ல் வில் வீரர் அவனை மனமடிவாக்கி அவன் மேல் எய்து அவனை பகைத்தார்கள். ஆனாலும் அவனுடைய வில் உறுதியாய் நின்றது. அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான். உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று. அவர் உனக்கு துணையாய் இருப்பார்** என்று ஆசீர்வதிக்கிறான். யோசேப்பை போல எல்லாராலும் பகைக்கப்பட்டு பொய்குற்றம் சாட்டப்பட்டு வேதனையோடு இருக்கிறீர்களா? இவர்கள் அம்புகளை எய்து விட்டார்களே. இதை நான் நினைத்துக்கூட பார்க்கவில்லையே என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? மனமடிவாக்கப்பட்ட யோசேப்புக்கு துணை நின்றவர், நமக்கும் துணை நிற்பார். தேவனாலே அப்படியாயிற்று. அவர் உன்னை கைவிடமாட்டார். உனக்கு அவர் துணை நிற்பார் என்று யாக்கோபு யோசேப்புக்கு சொன்னான்.

இயேசு கிறிஸ்து இந்த அம்புகளிலிருந்து காப்பாற்ற தன் மேல் அதை சுமந்து கொண்டார். அவர் நமக்கு துணையாயிருப்பார். மோசே தன் மகனுக்கு பெயர் வைக்கும் போது **யாத். 18:4 என் பிதாவின் தேவன் எனக்கு துணை நின்று பார்வோனின் பட்டயத்திற்கு என்னை தப்புவித்தார் என்று சொல்லி எலியேசர் என்று பெயர் வைத்தான்.** மோசேக்கு கர்த்தர் துணை நின்று பார்வோனின் பட்டயத்திற்கு தப்புவித்தார். நம்மையும் எல்லா பட்டயத்திற்கும் விலக்கி துணை நின்று தப்புவிப்பார்.

தாவீது சவுலுக்கு மறைந்து அரணான இடத்தில் இருக்கையில் பென்யமீன் புத்திரர், யூதா புத்திரர் சிலர் அரணான ஸ்தலத்தில் இருக்கிற தாவீதினிடத்தில் வந்தார்கள். நீங்கள் சமாதானமாய் வருகிறீர்களா? காட்டிக் கொடுக்க வருகிறீர்களா? என்ற போது அமாசாவின் மேல் ஆவியானவர் இறங்கி தாவீதே நாங்கள் உம்முடையவர்கள். ஈசாயின் குமாரனே! உமது பட்சமாயிருப்போம். உமக்கு சமாதானம், உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம். உம்முடைய தேவன் உமக்கு துணை நிற்கிறார் என்றான். 1நாளா 12:18 **உத்தமமாய் ஓடின தாவீதுக்கு தேவன் துணையாயிருந்தார்.** அதனால் தான் சங்கீதம் 63:7-ல் **நீர் எனக்கு துணையாய் இருந்ததினால் உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன் என்றான். தாவீது எவ்வளவு அருமையாய் அவரது செட்டைகளை அதன் நிழலை துணை** என்று விவரிக்கிறான். தேவனாகிய கர்த்தர் நமக்கும் தமது செட்டைகளின் நிழலினால் துணையாயிருப்பார்.

நாம் அவரை துணையாளராக ஏற்றுக் கொள்ளும்போது அவர் நம் கூடவே இருப்பார். நான் போய் உங்களுக்கு ஒரு துணையாளரை, தேற்றரவாளனை அனுப்புகிறேன் என்று இயேசு சொன்னார். இயேசுவின் ஆவியானவர் நம்மோடு என்றென்றைக்கும் நம்முடனே கூட இருப்பார். சங்.146:5-ல் **யாக்கோபின் தேவனை தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர் மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்** என்ற வார்த்தையின்படி கர்த்தரையே நம்பி அவர் நமக்கு துணையாய் இருப்பதை உணர்ந்து கொள்வோம். அவர் நமக்கு துணையாய் இருப்பதால் நாம் வெட்கப்படுவதில்லை. ஆக்கினைக்குள்ளாவதில்லை. துணையாளர் நம்மை கைவிடுவதில்லை! இதை வாசிக்கிற ஒவ்வொருவருக்கும் தேவனாகிய கர்த்தர் துணையாய் இருப்பாராக!

வானத்தின் வாசலில் நடைபெற்ற

# ஆசீர்வாத உபவாச ஜெபம்











தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒவ்வொரு மாதமும் நமது வானத்தின் வாசல் சுவிசேஷமையத்தில் வைத்து நடைபெறும் ஆசீர்வாத உபவாச ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் பாடல் ஆராதனை வேளையில் சகோதரியின் மூலமாக அநேகம் பேர் தொடப்பட்டார்கள். அநேகம் பேர் ஆவியில் களிகூர்ந்தனர். நம் சகோதரர் மூலமாக நீதி செய்கிற தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற தேவ செய்தியின் வாயிலாக கர்த்தர் அநேகம் பேரோடு பேசினார். தேவஜனங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தையும் விடுதலையும் பெற்றுச் சென்றார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய ஆகார மாத்திரம் அல்ல, சரீரப்பிரகாரமான ஆகாரமும் கொடுக்க தேவன் கிருபை செய்தார் அவருக்கே மகிமை உண்டாவதாக.

மதுரையில் நடைபெற்ற

# எழுப்புதல் உபவாச ஜெபம்




கர்த்தருடைய கிருபையினால் மதுரையில் ஒவ்வொரு மூன்றாவது சனிக்கிழமைகளில் நடைபெறும் எழுப்புதல் உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் நம் சகோதரி அவர்கள் பாடல் மற்றும் ஆராதனையின் மூலம் ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் அழைத்துச் சென்று ஆவியில் நிரம்பி ஆராதிக்க செய்தார்கள். மேலும் நம் சகோதரர் வின்சென்ட்ராஜ் அவர்கள் துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்ற தலைப்பில் நம் வாழ்க்கையில் தியாகத்தோடு வாழ வேண்டும் என்ற தேவ வார்த்தையின் மூலம் ஜனங்களுக்கு தியாக மனப்பான்மை உருவாகச் செய்தார். விசேஷித்த தேவசெய்தியாளர் சகோதரர் T. ஸ்டீபன் அவர்கள் எல்லாவற்றையும் ஆளுகிற தேவன் என்ற தலைப்பில் செய்தியளித்து ஒவ்வொருவரையும் தேவ ஆளுகைக்குள், தேவ ஆசீர்வாதத்திற்குள் நடத்தினார். அனைவருக்கும் ஆவிக்குரிய ஆகாரத்தோடு சரீரபிரகாரமான ஆகாரமும் கொடுக்க தேவன் கிருபை செய்தார். எல்லா மகிமையும் அவருக்கே உண்டாவதாக.

# அற்புதங்களை செய்கிற தேவன்



## சகோதரி. நிவேதா, மதுரை

எனக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகிறது. குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகவும் கவலையுடன் இருந்தேன். அந்த நேரத்தில் "இயேசு வாழ்கிறார்" ஊழியத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபம் செய்ய கேட்டேன். சகோதரி அவர்களும் எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அவருடைய கிருபையால் இன்று நான் குழந்தை பாக்கியம் பெற்றுள்ளேன். இது என் வாழ்க்கையில் நடந்த ஒரு பெரிய அற்புதம்.எனக்கு அற்புதம் செய்த தேவனுக்கு கோடான கோடி நன்றி!

## சகோதரி. சோபியா ஜேம்ஸ், நீலகிரி

என் மகளின் பி.எச்.டி சான்றிதழ் தொடர்பாக ஒரு பெரிய பிரச்சனை ஏற்பட்டது. அந்த நிலை எங்களுக்கு மிகவும் கவலையும், மன வேதனையும் அளித்தது. அந்த நேரத்தில் "இயேசு வாழ்கிறார்" ஊழியத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கண்ணீரோடு ஜெபிக்க கேட்டேன். சகோதரி அவர்களும் மிகவும் பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு, தனது கிருபையால் அந்த பிரச்சனையை அற்புதமாக மாற்றி, எல்லாவற்றையும் சரியாக செம்மையாக செய்து முடித்தார். எவர்கள் பிரச்சனை செய்தார்களோ அவர்களைக் கொண்டே அந்த காரியத்தைச் சரியாக செய்து முடித்த தேவனுக்கு எல்லா மகிமையும் கனமும் உண்டாவதாக.

## சகோதரி. சாந்தி, சேலம்

என் கணவர் மிகவும் பலவீனமாக இருந்தார். அவருடைய சரீர சுகவீனத்தை நினைத்து நான் மிகவும் கவலையுடன் இருந்தேன்.அந்த நேரத்தில் இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டேன். சகோதரி அவர்கள் பாரத்தோடு என் கணவருக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் அந்த ஜெபத்தை கேட்டார். இப்போது என் கணவர் நல்ல சுகத்துடன் இருக்கிறார். அவருக்கு பரிபூரண சுகத்தை கொடுத்த தேவாதி தேவனுக்கு நன்றி!

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு

இணைந்து

# சுவிசேஷ ஒளியை பரவச் செய்யுங்கள்

தேவன்,
தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமையமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

**1. BANK TRANSFER**

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI, MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | : L. VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0000109 |

**2. இணையதளம் (WEBSITE)**

**WWW.JESUSLIVES.IN**

**3. காசோலை (CHEQUE):**

**JESUS LIVES TRUST (OR)**
**L.VINCENT RAJ**

**4. GOOGLE PAY :**

**GPAY TO: 944 300 9333**

**5. மணியார்டர் (E.M.O)**

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ - காலனி பரவை,
மதுரை - 625 402.

**6. Whatsapp மூலம்**

9442800449 என்ற எண்ணிற்கு Donate என்று டைப் செய்து அனுப்பி whatsapp மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை செலுத்தலாம்.

**நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று காணிக்கைகளை வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 2800 447 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.**




## புதிய உச்சத்தை எட்டிய

# இந்திய ஏற்றுமதி வர்த்தகம்

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்துள்ளது என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் புதிய உச்சத்தை எட்டியுள்ளது. குறிப்பாக 2025-26 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதி (பொருட்கள் மற்றும் சேவைகள் இரண்டும் சேர்த்து) 860.09 பில்லியன் டாலர் என்ற புதிய உச்சம் கிடைத்துள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இது அதிகம் என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக முந்தைய நிதியாண்டோடு (2024-25) ஒப்பிடும்போது, இந்த நிதியாண்டு 4.22 சதவீதம் அதிகமாக உள்ளது. முந்தைய ஆண்டில் இந்த மதிப்பு 825.26 பில்லியன் டாலராக இருந்தது. உலகப் பொருளாதாரச் சூழல்களுக்கு மத்தியிலும் இந்தியாவின் ஏற்றுமதித்துறை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் இருப்பதையே இது காட்டுகிறது.

இதுதொடர்பாக வர்த்தகத்துறை தன் எக்ஸ் தளப்பதிவில், "2024-25 நிதியாண்டில் (ஏப்ரல்-மார்ச்) 825.26 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இந்தியாவின் மொத்த பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி, 2025-26 நிதியாண்டில் (ஏப்ரல்-மார்ச்) 860.09 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற புதிய சாதனை அளவை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 4.22% வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது" என்று தெரிவித்துள்ளது. மேலும் 2024-25 நிதியாண்டில் (ஏப்ரல்-மார்ச்) 437.70 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இந்தியாவின் மொத்த பொருட்கள் ஏற்றுமதி, 2025-26 நிதியாண்டில் 441.78 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது. இது 0.93% நேர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2026 மார்ச் மாதத்தில் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக்கு முக்கியக் காரணிகளாக பெட்ரோலிய பொருட்கள், பொறியியல் பொருட்கள், மைக்கா (Mica), நிலக்கரி மற்றும் இதர தாதுக்கள், பதப்படுத்தப்பட்ட தாதுக்கள் உள்ளிட்ட கனிமங்கள், இதர தானியங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைவினைத் தரை விரிப்புகள் தவிர்த்து) ஆகியவை இருந்தன. 'இந்தத் துறைகள் இந்தியாவின் ஏற்றுமதி விரிவாக்கத்திற்கும், துறைசார் வலிமைக்கும் தொடர்ந்து குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கின்றன' என்று வர்த்தகத்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இன்று வெளியிடப்பட்டுள்ள அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2026 மார்ச் மாதத்தில் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 20.98 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது. இதுவே நாட்டின் பொருட்கள் ஏற்றுமதி பிப்ரவரி மாதத்தில் இருந்த 36.61 பில்லியன் டாலரிலிருந்து 6.3 சதவீதம் உயர்ந்து 38.92 பில்லியன் டாலராக இருந்தது; அதேசமயம் இறக்குமதி 63.71 பில்லியன் டாலரிலிருந்து 5.98 சதவீதம் குறைந்து 59.9 பில்லியன் டாலராக இருந்தது.

Owned & Published by: Bro. L.Vincent Raj & Editor Bro. L. Vincent Raj, Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren 54,A.I.B.E.A-Nagar, Paravai, Madurai - 625 402.
Printed by: SHARON PRINT SYSTEM, NO.51/7, AHIMSAPURAM FIRST STREET, EXTENSION, NEAR SARASWATHI THEATER, SELLUR, MADURAI-625002



2026 மே
19,20
செவ்வாய் புதன்
தினமும் மாலை
6.00 மணிக்கு
திருச்சியில்
52 வது
பேரின்ப
பெருவிழா
பிஷப் ஹீபர்
மேல்நிலைப்பள்ளி
மைதானம்,
தெப்பக்குளம், திருச்சி,
தேவ
செய்தியாளர்கள்
EVG. L. வின்சென்ட்ராஜ்
EVG. கலா வின்சென்ட்ராஜ்
தொடர்புக்கு: 94428 00449, 94980 00449

RNI NO. TNTAM/2000/00621
PERIODICALS ACT, 2023




**உங்கள் வருகையை முன் பதிவு செய்ய:**

1. தொலைபேசி மூலமாக **9498000449, 9442800447, 9442800449**
2. வாட்ஸ் அப் மூலமாக **9498000449** என்ற Whatsapp எண்ணிற்கு "**REGISTER**" என்று டைப் செய்து அனுப்பி உங்கள் வருகையை முன் பதிவு செய்யலாம்.
3. இணையதளம் மூலமாக **soe.jesuslives.in**

TO,

**If Undelivered**
**(Please Return to)**
**YESUVAI THINAM PARKIREN**
54, A.I.B.E.A. Nagar, Paravai,
Madurai - 625 402.
Tamil Nadu, South India.